# THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 49 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, March 6-12, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-




## PSG announces collaboration to develop adv. wound care products



*Dr.T.M.Subbarao (2nd left), Dr.Sudha Ramalingam (3rd left) and representatives of Ardor Biomed after the MoU signing.*

The Covai Mail

PSG Institute of Medical Sciences and Research and PSG Hospitals have signed a Memorandum of Understanding recently with Pollachi based Biotech startup Ardor Biomed India Pvt Ltd to take up a joint research and technology support for the Development of Cellulose based advanced wound care products using coconut waste water as a raw material.

The MoU was signed by Dr. TM Subbarao, Principal, Dr. Sudha Ramalingam, Director, Research and Innovation, PSGIMS&R, and K. Vivekanand, CEO and Dr SP Suriyaraj, CTO on behalf of Ardor Biomed India Pvt Ltd, Pollachi.

The MoU covers research collaboration in the development of advanced wound care products for the diabetic foot and burn wound applications. PSGIMS&R will support Ardor Biomed in providing infrastructure facilities for preclinical studies, extend technical support for animal experiments and histopathology and guide in obtaining regulatory approvals.

*To Advertise in*
**THE COVAI MAIL**
**84898 12341**
**84895 12341**
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

## Project Uyarvu!

The Covai Mail

With an aim to promote empowerment for the destitute women, Walkaroo Foundation and charity organization Sharanalayam launched Project Uyarvu. It provides infrastructure and hands-on training for the women at the Sharanalayam campus.

As part of the initiative, the women were given vocational training and were taught to weave cloth bags and to do screen printing. Walkaroo Foundation has carried out a number of programmes in the areas of education, empowerment, and infrastructure improvement with the goal of fostering socio economic upliftment, particularly in the lives of the needy.

# KPRIET is now 'Great Place to Work' certified!

The Covai Mail

After surveying the characteristics of KPR Institute of Engineering & Technology and its work culture, US-Based research organization Great Place to Work Institute recently certified the college as a 'Great Place to Work'.

This research organization is considered to be a global authority on building, sustaining and recognizing High-Trust, High-Performance Culture at workplaces. It has conducted pioneering research on the characteristics of great workplaces for over 30 years, and it partners with more than 10,000 organizations every year around the world to help create and sustain a High-Trust,





High-Performance Culture. The certification from the Great Place to Work Institute is valid from March 2022 to March 2023.

Principal of KPRIET M.Akila shared that this has been possible because of the work-culture that is designed on the core-principles laid by the Chairman of KPR Group of Institutions, K.P.Ramasamy.

She shared that every faculty and the supporting staff of the institution imbibes the vision of the institution, and works in a collective manner towards achieving the mission; to produce elite class of engineers who are also enlightened.

Also, the Management gives autonomy to the faculty and encourages progress in every step. The well-being of the employees is constantly checked and whatever support is needed, the management provides, she shared.



*K.P.Ramasamy, Chairman*

### *DJAME's Corporate Connect*

# Expert from LMW speaks about Digital Marketing

The Covai Mail

D.J. Academy for Managerial Excellence organized an event as a part of Corporate Connect which is an industry institution interaction initiative, in which V.Shankar, Head (GM) - Digital Marketing, LMW Coimbatore, spoke on the topic "Does Digital Marketing really help businesses thrive? The What, Why and How of Digital Marketing" recently.

Shanker started the session by sharing his views on how far we have travelled from sending a telegram message through post office to the current scenario where we use plethora of free apps to disseminate information all over the world. He quoted that any business which is tasting success because of Digital Marketing have "Power skills" to sustain in the market. He then explained what digital marketing is, its advantages and the importance of having in-house



*V.Shankar addressing the gathering at DJAME. Also seen is A.G.V. Narayanan, Director, DJAME (1st Left)*

Digital Marketing team for any business.

Shanker took the audience through the Digital Marketing – 360 Degree Approach, He explained all the concepts in this approach and dwelt in detail about the Content Marketing through blogs, vlogs, Quiz, Polls, thought leadership, e-magazine etc, He insisted on the importance of content for any digital marketing efforts and the customer engagement through that. He asserted that "Content is King & Engagement is Queen". He also touched upon the latest trends in Digital Marketing, the activities to be noted in each stage of Digital Marketing - Pre-launch, During the launch and Post launch of any campaign. He elaborated on various tools used in Digital Marketing for the purpose of Key word Research, Search Engine Optimisation (SEO), Web Analytics, Social media, Marketing Automation etc.

The session was followed by a Q&A session. Students and Faculty members of DJAME and other institutions took part in this interaction initiative.





RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - கேட்டரிங்

THE COVAI MAIL
RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

Vol No. : 8 Issue No. : 49 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, March 6-12, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

## Founder's Day of SNR Sons Charitable Trust

# To Honor our Founder, Serve more people!

*-D.Lakshminarayanaswamy, Managing Trustee, SNR Sons Charitable Trust*



*(Seated from Left) V.Ramakrishna, Trustee, R.Sundar, Joint- Managing Trustee, D.Lakshminarayanaswamy, Managing Trustee and S.Narendran, Trustee, SNR Sons Charitable Trust with the Faculty & Staff of SNR Institutions who completed 25 years of service.*

**David Karunakaran**
The Covai Mail

More than 50 years ago, four visionary sons of a philanthropist named S.N.Rangaswamy Naidu founded a charitable trust in Coimbatore in order to fulfill their father's dream; which was to provide quality education and healthcare to all.

Before dwelling on the history of this Trust, it becomes paramount to throw light on at least a few of the recent contributions made by it.

So far, around Rs.65 crore worth of healthcare service has been provided to the less privileged people through the Multi-specialty Hospital of the Trust. The Educational Institutions under this Trust have empowered several thousands of students over the years in various streams. These institutions also have received Top Rankings from entities; both government and private, like NIRF, NAAC, ARIIA, India Today-MDRA Best College survey, and continue to provide higher education that is considered to be among the best in the district and State.

This Trust employs a great number of staff, faculty and doctors, (275 Doctors, 1500 medical staff, 1200 teachers, 600 management staff) educates more than 20000 students presently, and the magnitude of its yeoman services is ever expanding.

The sons of S.N.Rangaswamy Naidu who established this Trust were R.Chinnasamy Naidu, P.R.Ramaswami Naidu, R.Doraiswami Naidu and R.Venkatesalu Naidu. The Trust that runs these institutions is SNR Sons Charitable Trust.

Today under the guidance of the Managing Trustee D.Lakshminarayanaswamy, Joint Managing Trustee R.Sundar and Trustees S.Narendran and V.Ramakrishna, the institutions continue on the same path laid down by the Founder; Serving God by Serving Mankind.

To offer their pranams to S.N.Rangasamy Naidu on his birthday, the Trust organizes Founder's Day on February 27th of every year.

This year, noteable writer and novelist Indra Soundarajan took part as the Chief Guest, virtually. On the occasion, the staff and faculty who have completed 25 years of service at the institutions were honored.


The event was attended by the Trustees, Heads of various SNR Institutions and SNR Family members, staff and faculty.

# He lived for the People!

**- D.Lakshminarayanaswamy**

Speaking at the event, The Managing Trustee expressed that only a few win the sands of time and turn into legends. It is such people who act as The Pole Star and guide others in their journey. S.N. Rangaswamy Naidu was one such person who lived a simple life, and he lived for the people, esp. the downtrodden.

D.Lakshminarayanaswamy said that S.N. Rangaswamy Naidu supported many poor children to get educated and helped many sick people to get medical assistance and alleviated their suffering. His four distinguished sons followed in his footsteps and jointly established this Trust to serve the educational and healthcare needs of the people. "Our founder was an ardent devotee of the divine sage Sri Ramakrishna Paramahamsa, and so all our institutions bear the name Sri Ramakrishna."



From Day one to the present, the Trust is pioneering in the field of Education, Healthcare and Business, and actively serving the community, D.Lakshminarayanaswamy shared

Talking about the present accomplishments of the Sri Ramakrishna Institutions, he underlined some of the services done during the covid-19 pandemic.

"We continued to provide continuous education and guidance to our students, even when the pandemic caused disruption. Our hospital's service reached myriad number of people during this period, and we created public-awareness about the crisis."

"Our hospital has been recognized by the State Government for treating highest number of patients under Chief Minister's Comprehensive Health Insurance Scheme and we stand first. The hospital became the first in Coimbatore to receive the certification of Nursing Excellence from the National Accreditation Board for Hospitals and Healthcare (NABH), Quality Council of India," he said.

He also shared some of the milestones achieved by the Educational Institutions, which includes receiving funds from Engineering Council, getting top ranks for exhibiting excellence in academics, research and sports.

"This victorious journey should sustain and be longer one. We should wholeheartedly work for the benefit of society, and focus on accomplishing more objectives. When we work with total involvement and dedication, the result will double. No one can stop our victory, when we give the same reverence to work as we give to our Gods"

"We will be doing a great honor to our Founder when we lend a helping hand to innumerable people through the strong infrastructure set up by our Trust." he shared.



**Dr.S.Balaji,** *Consultant Cardiologist, Sri Ramakrishna Hospital*



**J.Felcy Jerina Queeni,** *Team Leader, Sri Ramakrishna Hospital*



**R.Rameshkumar,** *Lab Technician, Sri Ramakrishna Hospital*



**P.Raman,** *Electrician, Sri Ramakrishna Hospital*



**T.Remani,** *Senior Anaesthesia Technician, Sri Ramakrishna Hospital*



**S.Velumani,** *Nursing Assistant, Sri Ramakrishna Hospital*



**B.L.Shivakumar,** *Principal & Secretary, Sri Ramakrishna College of Arts & Science*

# Determination & Attitude crucial to Success



**-Indra Soundarajan**

The Chief Guest shared the importance of cultivating the habit of reading. He appealed to the students to use their smartphones less, and get smart by reading valuable books.

He conveyed that when the great African leader Nelson Mandela was imprisoned, he was only allowed one privilege, and that was left to his choice.

Mandela did not ask blankets, pillows or anything to comfort him but books to read. Indra Soundarajan said that reading has great impact on a person, and he wanted the students to cultivate this habit. "When you bow you head down to read a book, it will give you wisdom and make you lift your head high."

There is no one who would not love to be the victor in every attempt he/she makes. "But could there be any secret to success?," he asked.

He then shared that such a question was raised by a young man to one of the greatest philosophers of all time, Socrates.

Socrates asked the man to come to a riverside and walk with him to get the answer. They both walked towards the river slowly. Soon the water level reached their necks. Suddenly Socrates held the man's neck and kept pushing his head under water. The man struggled to get the air and after a while the philosopher released him. Socrates asked, "What did you want the most when your head was in the water?" The young man replied, "Air." Socrates said, "That is the secret to success. When you want success as badly as you wanted the air while you were in the water, then you will get it. There is no other secret."

Indra Soundarajan said that everyone who loves to win needs to have one-hundred per cent determination and zero per cent diversion to reach their destiny. He added that having good attitude and wise mentors also becomes crucial for one to win.



**V.Poonguzhali,** *Associate Professor & HOD, Sri Ramakrishna College of Arts & Science*



**R.Kesavasamy,** *Associate Professor, Physics, Sri Ramakrishna Engineering College*



**K.Chitra,** *Principal, Sri Ramakrishna College of Arts & Science for Women*



**A.S.Manjula Devi,** *Associate Professor, College of Pharmacy, SRIPMS*



**R.Suguna,** *Lab Attender, College of Pharmacy, SRIPMS*



**A.Anthoniammal Helenmary,** *Lab Attender, College of Pharmacy, SRIPMS*



**S.Devaki,** *Senior Grade Lecturer, Chemistry, Sri Ramakrishna Polytechnic College*



**V.Sureshkumar,** *HOD, Mechanical, Sri Ramakrishna Polytechnic College*



**R.Chandra,** *Attender, Chemistry, Sri Ramakrishna Polytechnic College*



**G.Shanmugalakshmi,** *Cleaning Worker, Sri Ramakrishna Polytechnic College*

# தொழிலில் சிறக்க எந்தக் கடவுளைக் கும்பிடலாம்?

தி கோவை மெயில்

கேள்வி: நமஸ்காரம் சத்குரு, நான் கடவுள் பக்தி உள்ளவன். பல வருடங்களாக வியாபாரமும் செய்து வருகிறேன். என் தொழிலில் சிறந்து விளங்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதற்காக எந்தக் கடவுளைக் கும்பிடலாம்?

சத்குரு: சொன்னால், அந்தக் கோயிலுக்குப் போவீர்கள். அங்கே கடவுளிடம் நேரடியாகப் பேச உங்களுக்குத் தெரியாது. அங்கே இருக்கும் பூசாரியை கடவுளின் ஏஜென்ட்டாக நினைப்பீர்கள். பத்து ரூபாய் கொடுப்பீர்கள். உங்கள் பெயர், நட்சத்திரம், முகவரி எல்லாம் சொல்லி அந்த ஏஜென்ட் கடவுளைக் கூப்பிடுவார்.

'இந்தப் புத்திசாலி உன்னை நம்பிப் பத்து ரூபாய் செலவு செய்திருக்கிறான். இவன் பிஸினஸைப் பார்த்துக் கொள்' என்றால் கடவுள் வருவாரா? இங்கே இருக்கும் அடி முட்டாள்கூட நீங்கள் கொடுக்கிற பத்து ரூபாய்க்காக உங்கள் பிஸினஸைப் பார்த்துக் கொள்ள மாட்டார். நீங்கள் மழித்துப் போடுகிற தலைமுடிக்காகவும், உண்டியலில் போடுகிற சில்லறைக் காசுகளுக்காகவும் காலம்பூராவும் உங்களைப் பார்த்துக் கொள்ள கடவுள் என்ன இளிச்சவாயரா?

என்னவொரு அற்புதமான இயந்திரமாக மனிதனைப் படைத்து உலகுக்கு அனுப்பியிருக்கிறார்? அவர் செய்ய வேண்டியதை எல்லாம் செவ்வனே செய்து முடித்துவிட்டார். இனி, மகனே உன் சமர்த்து!

உங்கள் திறமைகளை முன்வைத்து மைதானத்தில் நீங்கள் இறங்க வேண்டிய நேரம் இது. இப்போதும் கடவுளைக் கூப்பிட்டால் என்ன அர்த்தம்? கோடி ரூபாய் கொடுத்தாலும், உங்களுக்காகக் கடவுள் தன் சுண்டு விரலைக்கூட நகர்த்த மாட்டார். கவனித்துக் கொள்ள முடியவில்லை என்றால், அந்தத் தொழில் உங்களுக்கு எதற்கு?

இயற்கையில் எல்லா உயிர்களுமே தங்கள் இயல்புப்படி முழுமையாகத்தான் இருக்கின்றன. மனிதன் மட்டும்தான் சிதைந்து கிடக்கிறான்!

குடும்பத்தையே தோள் மீது சுமப்பதாக நினைத்து நினைத்து துக்கத்துடன் வேலை செய்பவர்களுக்கு எந்த ஆசை நிறைவேறும்?

**கேள்வி:** ஆனால் நான் என்னதான் கடவுளைக் கும்பிட்டாலும், நான் கேட்பது எதுவுமே கிடைப்பது இல்லையே?

**சத்குரு:** ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். படைப்பில் எந்தச் சக்தியும் உங்களுக்கு எதிராக இல்லை. அதை நீங்கள் கையாள்வதில்தான் அது ஆக்கப்பூர்வமாகவோ, அறிவுப்பூர்வமாகவோ மாறுகிறது.

ஒருநாள் அதிகாலையில் சூரியன் உதிப்பதைப் புகைப்படம் எடுக்க நினைக்கிறீர்கள். அன்று பார்த்து வானம் பொத்துக் கொண்டு மழை பெய்கிறது. உங்கள் எண்ணம் ஈடேற முடியாமல் போனதை நினைத்து, உலகத்தின் மீதே கோபித்துக் கொண்டு சோர்வாக அறை மூலையில் முடங்கிக்கிடந்தீர்கள் என்றால், உங்களுக்காகப் பரிதாபப்பட்டு இயற்கை தன்னை மாற்றிக் கொள்ளுமா?

அதை விடுத்து, மழையை ஆர்வத்துடன் கவனியுங்கள். ஒருவேளை, அற்புதமான வானவில்லைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கலாம். கிடைத்தற்கரிய புகைப் படமாகவும் அது அமையலாம். அப்படியே இல்லையென்றாலும், குவிந்து போயிருக்கும் வீட்டு வேலைகளைச் செய்து முடிக்க உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரமாக அதை ஏற்றுக் கொள்ளலாமே.

உங்களை மீறிய சக்திகளால், நீங்கள் செய்ய நினைத்ததைச் செய்ய இயலாமல் போகலாம். ஆனால், செய்யக்கூடியதையும் செய்யாமல் சோர்ந்து கிடப்பது, பைத்தியக்காரத்தனம் அல்லவா?

கடவுள் எங்கேயோ இல்லை. இங்கேதான் இருக்கிறார். நீங்கள்தான் அவரைக் கவனிக்காமல், எப்போதும் எங்கேயோ இருக்கிறீர்கள்.

நீங்கள் நினைத்தபடி உலகம் நடக்க வேண்டும். மற்றவர்கள் இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் உங்கள் அகங்காரம் வீண் சுமை! மனச்சோர்வு என்பது உள்ளிருந்து கொண்டே, கீறிக் கிழித்து, உபயோகமில்லாமல் அழித்துவிடும் விஷ ஆயுதம்!

> **"உங்களை மீறிய சக்திகளால், நீங்கள் செய்ய நினைத்ததைச் செய்ய இயலாமல் போகலாம். ஆனால், செய்யக்கூடியதையும் செய்யாமல் சோர்ந்து கிடப்பது, பைத்தியக்காரத்தனம் அல்லவா? கடவுள் எங்கேயோ இல்லை. இங்கேதான் இருக்கிறார்."**



## சிறந்த ஆசிரியருக்கான விருது வழங்கும் விழா

தி கோவை மெயில்

நேரு கல்விக்குழுமம் சார்பில் 'ஸ்ரீ பிகே தாஸ் நினைவு சிறந்த ஆசிரியர் விருது 2022' வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு நேரு கல்வி குழுமங்களின் தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் கிருஷ்ணதாஸ் முன்னிலை வகித்தார். தலைமை நிர்வாக அதிகாரியும் செயலாளருமான கிருஷ்ண குமார் வாழ்த்துரை வழங்கினார். நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் அனிருதன் வரவேற்றார்.

விழாவிற்கு முதன்மை விருந்தினராக கோயம்புத்தூர் முதன்மை கல்வி அதிகாரி கீதா கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்து பேசியதாவது: மாணவர்கள் அனைவரும் கோவிட் 19 பெரும் தொற்றுக்கு பிறகு மாணவர்கள் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை கையாள்வதில் ஆசிரியர்கள் மிகவும் சிரமப் பட்டனர். அவர்களை ஊக்கப்படுத்தி நல்ல கற்பித்தலையும் பண்புகளையும் அளிப்பது ஆசிரியர்களின் கடமை என்றார்.

தமிழகத்தை சேர்ந்த 64 ஆசிரியர்கள் மற்றும் கேரளாவை சேர்ந்த 10 ஆசிரியர்கள் உட்பட மொத்தம் 74 பள்ளி ஆசிரியர்களுக்கு சிறந்த ஆசிரியருக்கான விருது மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

## பெண்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் பி.சி.ஓ.எஸ் - மருத்துவர் வித்யா




எல்சி மருத்துவமனையில் பி.சி.ஓ.எஸ் (PCOS) க்ளினிக்கை துவங்கிய போது.

சு.ரம்யா
தி கோவை மெயில்

கோவை அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி எதிரில் அமைந்துள்ள எல்சி மருத்துவமனையின் மகளிர் நலனில் சிறப்பு பிரிவாக 'எல்சி பி.சி.ஓ.எஸ்' என்ற கிளினிக் துவங்கப்பட்டுள்ளது. எண்டோஸ்கோபி, லேப்ரோஸ் கோப்பியில் பிரசித்தி பெற்ற மருத்துவமனையாக விளங்கும் 'எல்சி' தற்போது மகளிருக்கான பிரத்தியேக பி.சி.ஓ.எஸ் கிளினிக்கை ஆரம்பித்துள்ளது. பூப்படைந்த காலத்துக்கு பிறகு தொடங்கி மெனோபாஸ் காலம் வரை மாதவிடாய் சுழற்சி சீராக இருக்கும். தற்போது இந்த சுழற்சி சீரற்று இருப்பது அதிகரித்து வருகிறது. இளம்பெண்கள் இன்று சந்திக்கும் பிரச்சனைகளில் முக்கியமானது பாலி சிஸ்டிக் ஓவரி சிண்ட்ரோம். சினைப்பையில் நீர்கட்டிகள் எல்லா வயதிலும் வரும் என்றாலும் இளம்பெண்கள் இந்த பிரச்சனையை சந்தித்தால் உடனடியாக சிகிச்சை எடுத்துகொள்வது நல்லது.

உடல் உழைப்பு இன்மை, கொழுப்பு நிறைந்த மற்றும் துரித உணவு பழக்கம் போன்ற காரணங்களால் பி.சி.ஓ.எஸ் என்ற சினைப்பை நீர்க்கட்டி வியாதி ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

பத்தில் மூன்று பெண்களுக்கு இந்த குறைபாடு உள்ளதாகவும், குழந்தையின்மைக்கான முதற் காரணமாகவும் இந்த பி.சி.ஓ.எஸ் நோய் உள்ளது. மாதவிடாய் கோளாறுகள், முகத்தில் அதிக முடி வளர்ச்சி, உடல் பருமன், தோலில் கருப்பு நிறமிகள் படிவு, குழந்தை பேறின்மை, ஹார்மோன்கள் சமநிலையின்மை ஆகியவை இவற்றின் அறிகுறிகளாக உள்ளன. இதுகுறித்து எல்சி மருத்துவமனையின் மருத்துவர்கள் கூறியதாவது:

### விழிப்புணர்வு அவசியம்!

**- மருத்துவர் வித்யா, நிர்வாக இயக்குனர்**

எங்களது மருத்துவமனையில் மகளிர் நலப்பிரிவில் பி.சி.ஓ.எஸ் கிளினிக் என்ற சிறப்பு துறையை தொடங்கியுள்ளோம். சினைப்பையில் ஏற்படும் நீர்க்கட்டிகளைத் தான் பி.சி.ஓ.எஸ் என்கிறோம். இன்றைய வாழ்க்கை முறையில் பெண்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக இந்த நோய் உருவெடுத்துள்ளது. இந்த நீர்க்கட்டியினால் பெண்களுக்கு பரு, முகத்தில் முடி வளர்தல் என ஆரம்பித்து கருப்பை புற்றுநோய், குழந்தையின்மை உள்ளிட்ட விளைவுகள் ஏற்படுகிறது.

பெண்களின் மலட்டுத்தன்மைக்கு மிகமுக்கிய காரணமாக பி.சி.ஓ.எஸ் உள்ளது. மன அழுத்தம், வாழ்க்கை மற்றும் உணவு முறை மாற்றங்களினால் தற்போது இந்நோய் அதிகமாகியுள்ளது. முறையான விழிப்புணர்வை ஏற்படுத்தினால் இந்நோய் முற்றிலும் தவிர்க்க கூடிய ஒன்று தான். பெண்களின் வாழ்க்கை மற்றும் உணவு பழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தினாலே இதனை தவிர்க்க இயலும். மேலும் இது பற்றிய விழிப்புணர்வை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்படுத்த உள்ளோம்.

### குழந்தையின்மைக்கு முக்கிய காரணம் பி.சி.ஓ.எஸ்

**- ரேவதி, மகப்பேறு மருத்துவர்**

பி.சி.ஓ.எஸ் நோயின் முதல் அறிகுறியாக சீரற்ற மாதவிடாய் உள்ளது. இரண்டாவதாக குழந்தையின்மை பிரச்சனை உள்ளது. மேலும் பெண்களுக்கு குழந்தையின்மைக்கான காரண மாக 50 முதல் 60 % வரை பி.சி.ஓ.எஸ் நோய் உள்ளது. இவர்களுக்கு கருமுட்டை வளர்வதில் பிரச்சனை ஏற்படுகிறது. மனஅழுத்தமும் இவர்களுக்கு பொதுவாக காணப்படுகிறது.

கொரோனா காலத்திற்க்கு பின்பு இதனால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. துரித உணவு மற்றும் அதிக சர்க்கரை சேர்க்கப்பட்ட பண்டங்களை உண்பதால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கிறது. மேலும் இந்த நோயின் நீண்ட கால விளைவுகளாக சர்க்கரை நோய், ரத்தக் கொதிப்பு, இதய நோய், கருப்பை புற்றுநோய் ஆகியவை வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

### வாழ்க்கை முறை மாற்றம் வேண்டும்!

**- சவிதா, மகப்பேறு மருத்துவர்**

சீரற்ற மாதவிடாயை சரி செய்வதற்கு சில மாத்திரைகளை பரிந்துரைத்தாலும், அதை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்தான் பயன்படுத்த முடியும். அதனால் எங்கள் பி.சி.ஓ.எஸ் கிளினிக்கில் பெண்களுக்கான டயட் மற்றும் வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் நாங்கள் அதிக கவனம் செலுத்துகிறோம். தேவை உள்ள போது மட்டுமே மருந்து மற்றும் சிகிச்சை முறைகள் அளிக்கப்படுகிறது. ஆனால் அவை நீண்ட நாட்களுக்கு அளிக்கப்படாது.

## கே.பி.ஆர். கல்லூரியில் நாட்டிய விழா



ஒடிசி நடன நிகழ்ச்சியில் நடனமாடிய கலைஞர்களை கௌரவித்த பொறியியல் கல்லூரி முதல்வர் அகிலா

தி கோவை மெயில்

கே.பி.ஆர். கல்வி நிறுவனங்கள் மற்றும் குழும நிறுவனங்களின் சார்பாக இயங்கி வரும் குறிஞ்சி தமிழ் சங்கத்தின் சார்பாக ஒடிசி நாட்டிய விழா கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்கத்தாவின் ஒடிசி நடனத்தின் குரு ஸ்ரீமதி சதாப்தி மல்லிக் குழுவினரின் நடனம் அரங்கேறியது. தமிழகத்தில் கோவையில் இந்த நடன வகைகளை முதன்முதலாக கே.பி.ஆர் நிறுவனங்கள் சார்பில் அரங்கேற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது.

கே.பி.ஆர். நிறுவனங்களின் தலைவர் ராமசாமி வழிகாட்டுதலின் பேரில் இந்நிகழ்வு நடைபெற்றது. கே.பி.ஆர். பொறியியல் கல்லூரி முதல்வர் அகிலா தலைமையேற்று நடத்தினார். இவ்விழாவில் கே.பி.ஆர்.கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரி முதல்வர் பாலுசாமி வாழ்த்துரை வழங்கினார்.

இந்திய பாரம்பரிய நடனங்களில் பரதம், மணிப்புரி, கதகளி, தாண்டியா போன்ற பாரம்பரிய நடன வகைகளில் ஒடிசி ஒரு புகழ்பெற்ற நடன வகை ஆகும்.

கல்கத்தாவின் ஒடிசி நடனத்தின் குரு ஸ்ரீமதி சதாப்தி மல்லிக் குழுவைச் சேர்ந்த தேபஸ்மிதாகர், இந்திராணி மிஸ்ரா, ஸ்ரீ டன் மொய் சமந்தர், மற்றும் குமாரி இந்துராணி ஆகியோர் ஒடிசி நடனத்தை கல்லூரி கலையரங்கில் நிகழ்த்தினர். இந்த நடன குழுவினர் சிதம்பரம் நாட்டியாஞ்சலிக்கும் தேர்வாகி உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வரலாறு காணாத பருத்தி பற்றாக்குறை
## உடனே உதவ சைமா வேண்டுகோள்

தி கோவை மெயில்

வரலாறு காணாத பருத்தி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் தேவையான பருத்தியை வரியில்லாமல் இறக்குமதி செய்ய உதவுங்கள் என இந்திய அரசிற்கு சைமா (தென்னிந்திய பஞ் சாலைகள் சங்கம்) தலைவர் ரவி சாம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சைமா அலுவலகத்தில் இது குறித்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் அவர் கூறியதாவது, தற்போது பருத்தி கட்டுபடி ஆகாத விலையில் உள்ளதாக தெரிவித்த அவர் பருத்தியின் தரம் மற்றும் அளவு குறைந்துள்ளதாகவும் விலை அதிகமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மில்களில் தற்போது பருத்தி இருப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு பேசினார். மேலும் பருத்திக்கான இறக்குமதியில் 11 சதவீத இறக்குமதி வரியை நீக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். பருத்தி பருவ காலம் அல்லாத காலத்தில் ஒட்டு மொத்த ஜவுளி தொழிலும் நெருக்கடியை சந்திக்க கூடிய நிலையை நோக்கி இந்திய ஜவுளித்துறை சென்று கொண்டிருக்கிறது.

பருத்தி சீசன் அல்லாத காலத்தில் நாட்டில் ஜவுளி உற்பத்தி நிற்பதை தடுத்து அதன் மூலம் தொழிலாளர்களின் வேலை இழப்பை தடுக்க பருத்தி கொள்கையில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நடப்பு பருவத்தில் பருத்தி நுகர்வு 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாகவும், அதனால் ஜவுளித் துறையின் தேவை 360 லட்சம் பேல்களை எட்ட வாய்ப்பு உள்ளதாகவும் கூறினார்.

வரலாற்றில், நாட்டின் பருத்தி நுகர்வு அதன் மொத்த உற்பத்தியைக் காட்டிலும், முதன்முறையாக பருத்தி பற்றாக்குறையை நோக்கி நாடு நகர்கிறது என்றும் தெரிவித்தார்.

இறுதி கையிருப்பு 25 லட்சம் பேல்கள் ஆக இருப்பதால் 40 லட்சம் பேல்கள் அளவிற்கு தரமான பருத்தி கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் தொழில் துறையின் வளர்ச்சியை தக்க வைக்க தரமான பருத்தி கிடைக்கப்பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டு பேசினார்.

தேவையின் அடிப்படையில் குறிப்பிட்ட அளவு பருத்தியை வரியில்லாமல் இறக்குமதி செய்ய அனுமதிப்பது அவசியம். பருத்தி பற்றாக்குறை எதிரொலியாக ஜவுளித்துறைக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், பஞ்சு விலை உயர்வால் தொழிற்சாலைகள் நெருக்கடியில் உள்ளது என்றும் கூறினார்.